செ.வெ.எண். 38 நாள். 16.05.2017

## பத்திரிக்கை செய்தி

### அருந்ததியர் இன பெண்களில் முன்னுரிமை உள்ளோருக்கான வேலை வாய்ப்பு

திருநெல்வேலி மாவட்டப் புள்ளி இயல் துணை இயக்குநர் அலுவலகத்திற்கு தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் தொகுப்பூதியத்தில் ஒரு புள்ளி விவர ஒருங்கிணைப்பாளர் பதவிக்கு இனச்சுழற்சி முறையில் இந்து அருந்ததியர் இன பெண்களில் முன்னுரிமை அடிப்படையில் நியமனம் செய்யப்படவுள்ளது. இப்பணிக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.15,000/- தொகுப்பூதியமாக வழங்கப்படவுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்திற்குட்பட்ட தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றது.

கல்வித் தகுதி ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு மற்றும் கணினியில் பட்டயப்படிப்பு/சான்றிதழ் படிப்பு முடித்திருக்க வேண்டும். வயது வரம்பு 01.01.2017 அன்றைய நிலையில் 21 முதல் 35 வயது-க்குள் இருக்க வேண்டும். எழுத்து தேர்வு மற்றும் நேர்காணல் மூலம் தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

விண்ணப்பிக்க விரும்பும் நபர்கள் தனித்தாளில் தங்கள் பெயர், பிறந்த தேதி, வயது, கல்வித் தகுதி, சாதி, இருப்பிட முகவரி, முன்னுரிமைச் சான்று மற்றும் பணி அனுபவம் போன்ற சுய விபரங்களைக் குறிப்பிட்டு மாவட்டப் புள்ளி இயல் துணை இயக்குநர், மாவட்டப் புள்ளி இயல் அலுவலகம், மண்டலப் போக்குவரத்து அலுவலகம் பின்புறம், என்.ஜி.ஓ. "பி" காலனி, ஜவஹர்நகர், திருநெல்வேலி -7 என்ற முகவரிக்கு 31.05.2017-க்குள் அனுப்பிட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

புள்ளி இயல் துணை இயக்குநர் (மு.கூ.பொ.)
திருநெல்வேலி

16.5.17

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
திருநெல்வேலி